# வெற்றிமணி

மலர் 7 இதழ் 8

சிறுவர் மாத இதழ்



கௌரவ ஆசிரியர்:
**மு. க. சுப்பிரமணியம்**

நேயர்களுக்கு நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

15-12-69 சதம் 30

நங்கையர் விரும்பும் நவநாகரீக

★ நகைகளுக்கும் ★ வைரங்களுக்கும்

புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே. என். எம். மீரான் சாஹிப்

''தங்கப்பவுண் நகை மாளிகை''

**கன்னாதிட்டி** தொலைபேசி: 585 **யாழ்ப்பாணம்**

*Visit*

# K. N. M. MEERAN SAHIB

**JEWELLERS & DIAMOND MERCHANT**

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial*: 585 **JAFFNA**

## வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு- வயிற்று வலிக்குச் சிறந்தது. (பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00

(தேவைக்கு எழுதவும்)

## வீரகேசரி மாத்திரை

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்

100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13, 24—ரூ. 7. (மெழுகு ரூ. 4)

(பார்சல் சார்சு தனி)

**பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P.**

அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-

(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவிரோடு, பம்பாய்-17

# — வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

மலர் 7 | திங்கட்கிழமை 15-12-69 | இதழ் 8

அன்புத் தம்பி தங்கைகளே!

தீபாவளி வாழ்த்து அனுப்பிய அனைவருக்கும் நன்றி! எல்லோருக்கும் எனது நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்! வகுப்பேற்றப் பரீட்சை, க. பொ. த. ப. பரீட்சை ஆகியன நடைபெறுவதால் கட்டுரைப் போட்டியின் முடிவுதிகதியைப் பின்போடும்படி பலர் எழுதியுள்ளனர். எனவே, போட்டி முடிவு திகதி 31-12-69 என மாற்றப்பட்டுள்ளது. தம்பி தங்கைகள் இத் திகதிவரை கட்டுரைகளை அனுப்பலாம்.

பொங்கல் மலர் சிறப்பாகத் தயாராகிக் கொண்டிருக்கிறது. புதுவருடம் தொடக்கம் புதிய அம்சங்களுடன் வெற்றிமணி வெளிவரும். அதிபர்களும், ஆசிரியர்களும் வெற்றிமணியை மேல் வகுப்பு மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்து, அதிலுள்ள கட்டுரைகளை — கவிதைகளை வாசித்துக் காட்டிப் பயனடையச் செய்யவேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன்!

— ஆசிரியர்

## பொருளடக்கம்


| | |
|---|---|
| தலையங்கம் … … … … | 1 |
| எத்தனையோ பாடினேன் … | 2 |
| வீண் செலவு … … … | 4 |
| விந்தை நிறைந்த உயிரினங்கள் | 5 |
| மாணவர் மன்றம் … … … | 8 |
| கணக்கியலுக்கோர் அறிமுகம் … | 9 |
| பேனா நண்பர் சங்கம் … … | 13 |
| கவிதை அரங்கம் … … … | 14 |
| பன்னிரண்டுமணி … … … | 17 |
| தாய் சொல்லைத் தட்டாதே! … | 19 |
| சிங்கள மன்னனின் சிங்ககிரி | 21 |
| குறும்பு செய்யும் குழந்தை … | 23 |
| சுகாதார வாழ்வுக்கு! … … | 24 |
| நான் விரும்பும் பண்டிகை … | 26 |
| தன்னம்பிக்கை … … … | 28 |
| முஸ்லீம் பெண்கள் … … | 29 |



## வருட சந்தா

பொங்கல் மலர்
தபாற்செலவுட்பட

| | |
|---|---|
| இலங்கை | ரூபா. 4-00 |
| இந்தியா | ரூபா. 4-00 |
| மலாயா | $ 4-00 |



## விளம்பர விகிதம்

| | |
|---|---|
| வெளி அட்டை | ரூபா. 75-00 |
| உள் அட்டை | ரூபா. 60-00 |
| முதற் பக்கம் | ரூபா. 50-00 |
| உட் பக்கம் | ரூபா. 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்
15 வீதக் கழிவுண்டு
விபரங்களுக்கு எழுதுக.
வெற்றிமணி
முள்ளியவளை — இலங்கை

## எத்தனையோ பாடினேன்
# இவரைப் பாட வருகுதில்லை!

— இரசிகமணி கனக. செந்திநாதன் —

சிலம்பொலி தொடக்கம் இல்லையான காவியம் வரைக்கும் புதுமை மணக்கப் பாடிய கவிஞர் ஒருவருக்குப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் அமரத்துவமடைந்த காந்தி மகானைப்பற்றி ஒரு கவிதை எழுதி அனுப்புங்கள் என்று கடிதம் எழுதினர். 'சுடச் சுட'ப் பாடல் எழுதுகின்ற அக் கவிஞர் பலநாள் பேசாமலிருந்துவிட்டார். பல ஞாபகக் கடிதங்கள் வந்தபின், ''எத்தனையோ கவிதைகள் பாடியிருக்கிறேன்; ஆனல், இந்த மகானைப் பாட வார்த்தைகளே வருகுதில்லை; நானென்ன செய்ய?'' என்று பாடலிலேயே பதில் அனுப்பினர். அதுவே காந்தி மகானைப் பற்றிய பாடலாக அமைந்துவிட்டது. இந்தப்பாணிக் கவிதையில் நேருக்கு நேர் பேசுவதுபோல எடுப்பாக அமைந்தும் விட்டது.

காந்தி மகான் அமரத்துவ மடைந்துவிட்டார். மனித குலம் அனைத்துக்கும் ஒரே சோகம்; கவிஞர், காந்தி மகானின் பெயரையே கூற அஞ்சுகிறர். இஷ்ட குலக் கடவுள், நம்முன் இருந்த தெய்வம், என்றே அழைக்கிறர்.

''இஷ்டகுலக் கடவுள் நம்முன், இருந்த தெய்வமொன்று - மனித
துஷ்டத் தனத்தாலே - அதுவும், சூக்குமம் ஆகிவிட
எட்டுவரி எனினும் - அதை முன், னிட்டுக் கவிதையொன்று
கட்டி அனுப்புமென்று - உங்கள் கடிதம் வந்தது காண்''

கவிஞர் பேனையைத் தூக்கிவிட்டார். சொற்களே வரவில்லை. ''உளம்கொண்டு தெள்ளித் தெளிக்கும் பனுவல்'' பிறக்கவில்லை. அவரே தன் நிலையை வெளிப்படக் கூறுகின்றர்; தன் நிலையைக் கண்டே இரங்குகிறர்.

''சொட்டுக் கவிதையுமே - அன்றன், சோக உளத்தினிலே
தட்டுப் படவுமில்லை - இதுவரை, தாபமும் ஆறவில்லை
உள்ளம் தெளிந்ததிப்போ - கொஞ்சம் ஊக்கம் பிறந்ததுண்டோ
வெள்ளம் எனப்புரளும் - கவிதை வேகம் பிறக்கவில்லை [ஆயின்

ஏதேனும் ஒருவழியாகத் தொடங்கிவிட்டால் பாடி முடித்துவிடலாம் என்று எண்ணுகிறர் அவர்.

ஆறுத துக்கம் இதெம் - உள்ளம். ஆற்றுத பேரிழவு
மாறுத கேடடா! - நூறு, மாமாங்கம் ஆனலும்''

உள்ளத்திலே உள்ள சோகத்திற் கேற்ற வார்த்தைகள் வந்து சொல்லு சொல் என்று நாவிற் துடித்தன. ஆனல் ‘மனிதன் மகாத்மாவைத் துப்பாக்கியாற் கொல்லலாம்; எங்களுடைய உள்ளம் மகாத்மாவைக் கொல்லச் சம்மதிக் குமா?’’ என்ற எண்ணம் அவருக்கு ஏற்படுகிறது. அவருக்கு ஒரு தயக்கம்; பேனா ஓட மறுக்கிறது; வேறொரு விதமாகத் தொடங்குகிறார்;

‘‘இந்திய நாட்டினுக்கா - இல்லை, இத்தல முற்றினுக்கும்
சொந்தம தாய ஒரு - சொத்தினை, வித்தகனை’’

என்று தொடங்கி எழுதினர். அதற்கப்புறம்......அப்பால்... மறுபடியும் பேனா மறுக்கிறது. ஒரு எண்ணமா? ஒன்பது நினைவா? ஓராயிரம் சம்பவங்கள் அல்லவா வந்து குவிகின்றன. எதை எழுதுவது? எப்படி எழுதுவது?

காந்தி செத்துவிட்டாரரா? தேவனவன் பொன் ஒளியாய்த் தீ பரவிவிட்டதா? இல்லை; இல்லை என்கிறது அவர் உள்ளம்.

செத்தனனே அடடா! – காந்தி செத்து மடிபவனே? – இல்லை
உத்தமன் வாழுகிறான் – என்றன் உயிரும் வாழுகுதே
நித்தியன் வாழுகிறான் – என்றும், நிமலன் வாழுகிறான்
சத்தியம் வாழுகுதே – அஹிம்சைச், சாதகன் வாழானே?

என்கிறது அவர் மனம். ஆகவே அவர் பத்திரிகை ஆசிரியரைப் பார்த்து ‘‘பத்திரிகாசிரியீர், என்ன பாதகம் செய்துவிட்டீர்! செத்தனன் என்றதோ - என்னைச் செப்பிடச் சொன்னீரே’’ என்று கோபித்துவிட்டு ‘‘வையம் அழிந்திடினும், இந்த வாழ்வு பறந்திடினும், ஐய! அது குறித்தே நானோர் அடியும் பாடேனே’’ என்று முடித்திருக்கிறார்.

‘இஷ்டகுலக்கடவுள் நம்முன் இருந்த தெய்வமொன்று’ ‘ஆறாத துக்கம் இதெம், உள்ளம் ஆற்றாத பேரிழவு’ ‘இந்திய நாட்டினுக்கா? இல்லை இத்தல முற்றினுக்கும் சொந்தமதாய தொரு சொத்து’ என்று அருமையான தொடக்கங்களுக்கு உரிய ஆசையை எழுப்பிவிட்டுக் கவிஞர் ‘சடக்’ கென்று முடித்துவிட்டாரே என்ற ஆதங்கம் இரசிகர்களுக்கு. இந்த அரிய கவிதையைப் பாடியளித்தவர் ‘சிலம்பொலி’ என்ற கவிதை நூலைத் தந்த நாவற்குழியூர் நடராசன் அவர்கள்.

# வீண்செலவு (48)

மு. க. சுப்பிரமணியம்

சுசீலா பன்னிரண்டு வயதுச் சிறுமி. பெரிய தனவந்தரின் மகள். செல்லமாக வளர்ந்து வருபவள். சுசீலா வீட்டுக்கு அயலிலே கொடிய மிருகங்கள் அற்றகாடு ஒன்று உண்டு. அதில்மான்கள், குரங்குகள்,மயில்கள் தான் அதிகம் உண்டு.

ஒருநாள் காலே காட்டிலேயுள்ள இவற்றைப் பார்ப்ப தற்காகச் சுசீலா தன்னந்தனியே சென்றாள். மரங்களிலே குதித்துத் தாவும் குரங்குகளையும், துள்ளி ஓடும் மான்களை யும் கண்டு களித்தாள். மயில்களின் அகவும் ஓசையைக் கேட்டு இரசித்தவண்ணம் காட்டில் அதிகதூரம் சென்று விட்டாள். நேரம் பகல் பதினொருமணியிருக்கும். சுசீலா வுக்குப் பசிஎடுக்கத் தொடங்கியது. தாகத்துக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. வீட்டுக்குப் போகத் திரும்பி நடந்தாள். வழி தவறிவிட்டது. அங்குமிங்கும் அலேந்தாள். களைப் படைந்தாள். ஒரு மரத்தடியில் இருந்து அழுதாள்.

தான் தினமும் வீட்டில் உண்டு மிகுதியாக வீசும் கேக் துண்டை, ரொட்டியை, சோற்றை எண்ணினாள். ''அம்மா வீணாக எறியாதே, முழுவதையும் சாப்பிடு'' என்று அடிக் கடி கூறும் வார்த்தைகளை யோசித்தாள். ஒருநேரப் பசி யைத் தாங்க முடியவில்லையே, ஏழைகள் என்ன செய்வார் கள். வீணாக எறியும் உணவை ஏழைகளுக்குக் கொடுக்க லாமே என்று சிந்தித்தாள். அழுதுகொண்டிருந்து பய னில்லை என எண்ணித் திரும்பவும் நடந்தாள். சிறிது தூரம் சென்றதும் விறகு பொறுக்கிக்கொண்டிருக்கும் இரு சிறுமி களைக் கண்டாள். சந்தோஷத்தால் அவர்களிடம் ஓடினாள். கிராமத்துக்கு வழியைக் காட்டும்படி கேட்டாள். அவர் களும் பொறுக்கிய விறகுகளையும் கொண்டு சுசீலாவையும் கூட்டிச் சென்றனர். கிராமத்துக்குச் சென்றதும் சுசீலா தன் வீட்டுக்குக் கால்மைல் தூரம்வரை செல்லவேண்டும் என அறிந்துகொண்டாள். விரைவில் நடந்து வீடு சேர்ந்தாள்.

சுசீலாவின் அம்மா சுசீலாவைக் காணாது பல இடங் களிலும் தேடிக் கவலையுடன் வீட்டு வாயிலில் நின்றாள். சுசீலாவைக் கண்டதும் ஓடிச்சென்று முத்தமிட்டாள். சுசீலா நடந்தவற்றைக் கூறினாள். 'அம்மா நான் இனி மேல் எதையும் சாப்பிடாது வீசமாட்டேன், வீணாக்க மாட்டேன், ஏழைகளுக்குக் கொடுப்பேன்'' என்றாள். ''சுசீலா சாப்பாட்டை மாத்திரமல்ல எப்பொருளையும் வீணாக்கக் கூடாது, வீண் செலவுசெய்யக் கூடாது'' என்று அம்மா கூறினாள்.

# விந்தை நிறைந்த உயிரினங்கள்!

— த. அரியரத்தினம் B. Sc. Dip. in Edu. —

**வேடிக்கையான** உலகத்திலே வேடிக்கையான மனிதர்களை, விந்தைகள் செய்திடும் வீரர்களைப் பார்க்கின்றோம். அவர்கள்பற்றிக் கேட்கிறோம். ஆனல் இயற்கையின் படைப்பிலே நாம் பார்க்காத கேட்காத பல விந்தைகள்பற்றியே நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். பேசும் ஆற்றலில்லாத உயிரினங்களின் அதாவது தாவர விலங்கினங்களிடையே காணப்படும் விந்தைகள் பற்றிப் பார்த்திடுவோம்.

சாதாரணமாக விலங்குகள் மாப்பொருள் தயாரித்து உணவாக்கிக் கொள்கின்றன. வேர்கள் மூலம் நீரை உறுஞ்சுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ஆனல் மனிதரைப்போல் வேட்டை மிருகங்களைப்போல் மாமிசம் உண்ணும் தாவரங்கள்பற்றித் தெரியுமா? இலங்கையில் கூட இவை இருக்கின்றன. நெபென்திசு, திரோசெரா, ஊற்றிக்குலேரியா எனப் பல தாவரங்கள் உண்டு. நெபென்திசு கூசா போன்ற அமைப்புடையது. இதற்குள் தேன் போல் தோற்றமளிக்கும் திரவம் உண்டு. இதில் மயங்கி ஓடிவரும் பூச்சிகள் கூசாவினுள் வந்தபின்தான் தங்களுக்கு இறப்பு அண்மித்துவிட்டதை உணருகின்றன. அங்குள்ள திரவம் மெழுகுத்தன்மை வாய்ந்தது. அதில் அமிழ்ந்து கண்கள் இறக்கைகள் மீதெல்லாம் மெழுகு படிய மேல் எழுந்துவர முயன்றுல் சாடியில் உட்புற சுவரோரங்களில் நீட்டியிருக்கும் வேல்போன்ற உறுப்புக்கள் அவற்றை மீண்டும் கீழே தள்ளிவிடும். இந்தப் பூச்சிகள் இறந்துபட நொதிச் சத்துக்கள் பல சுரக்கப்பட்டு உணவுச் சத்தைத் தாவரம் உறிஞ்சுகின்றது. திரோசெராவிற் பூச்சி வந்திருந்தால் அதன் வெளிப் புறத்திலுள்ள பிசிர்கள் பூச்சியை மூடிக்கொள்கின்றன. ஊற்றிக்குலேரியா நீர்வாழ் தாவரம். இதில் பலூன் போன்ற உறுப்புகளும், ஒரு கதவுபோன்ற அமைப்பும், உணர்ச்சியுள்ள மயிர்களும், உண்டு. தயற்றம் போன்ற நுண்ணகங்கள், நுண்ணிய விலங்கினங்கள் அண்மையில் வந்தால் கதவு திறபடும். நீரோடு இவை உள்ளே போகலாம்; வெளியே வரமுடியாது. கதவு அடைபட்டுவிடும். அங்கு சிறைப்பட்டு வாழமுடியாது; இறந்துவிடும்.

தாவரம் அதன் சத்தை உறிஞ்சிக்கொள்ளும். இது விந்தை யாகத் தெரியவில்லையா?

ஒருவருக் கொருவர் உதவி, சமரசமாக வாழ்வது மனிதரிடையே குறைந்து வந்தாலும் இந்த இனங்களிலே அவை இருக்கின்றன. முனிவன்நண்டு என்றொன்று. இதற்கு அசைந்து திரியும் வல்லமை உண்டு. ஆனால் பகைவரிட மிருந்து தப்பும் வழி தெரியாது. சீயனிமோன் என்னும் வேறொரு விலங்கு நச்சுப் பொருள் உள்ள பிசிர் மயிர்களை உடையது. ஆனால், அசையும் வல்லமைஇல்லை. இது முனி வன்நண்டின் உடலிலிருந்து, பகைவரிடமிருந்தும் தன்னைக் காப்பாற்ற நண்டு பிரதியுபகாரமாக அனிமோனை ஒவ் வோரிடமாக அழைத்துச் செல்கின்றது. இந்த நண்டு குகைபோன்ற ஓட்டினுள் வாழ்வதால் இதற்கு முனியன் நண்டு என்ற பெயர் வந்தது. இதுபோலவே ஒரு பங் கசுக்கும் பச்சை நிற அல்காவுக்கும் ஒன்றிய வாழ்வுண்டு. இது இலைக்கன் எனப்படும்.

ஆகாயத்திலிருந்து கீழே குதிக்கப் பரசூட் கண்டு பிடிப்பதற்கு முன்பிருந்தே தாவரங்கள் பரசூட் முறையில் தங்கள் விதைகளைப் பழங்களைப் பரப்பி வந்துள்ளன. எருக் கலை, இலவம்பஞ்சு, மூக்குத்திப் பூண்டு முதலியவற்றில் கற்றை கற்றையாக மெல்லிய இலைகள் பல இணைந்து மெல்லெனப் பறந்துவர உதவுகின்றன. கூட்டமாக இறங் குவது போர்வீரர் ஒரு போர்க்களத்தில் இறங்குவது போன்ற ஒரு விந்தையாகக் காட்சியளிக்கும்.

கட்சிவிட்டுக் கட்சி மாறுவது நம்மிற் பலரது வழக் கம். இந்தப் பழக்கம் பச்சோந்தியில் உண்டு. பெரும் பாலும் பச்சையாக இருக்கும். ஆனாலும் தான் எந்தச் சூழ லில் வாழ்கின்றதோ அந்தச் சூழலுக்கு இசையத் தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும். இதுபோற் சில பூச்சிகளும் இருக்கும். காய்ந்த இலைகள் கழுகுகள் போன்ற இடத் தில் பல பூச்சிகள் உண்டு. இவற்றை மேலெழுந்தவாரியா கப் பார்க்கில் இவை இலைகள் போலவேயிருக்கும். எனவே பகைவரிடமிருந்து தப்பித்துக்கொள்ளும்.

தாவரங்களில் ஆவியுயிர்ப்பு என்று ஒரு அனுசேப முறை உண்டு. மேலதிகமான நீரை ஆவியாக இலைகளில்

காணப்படும் இலைவாய்கள் மூலம் வெளியேற்றுவது. ஆனால் வறண்டநிலத் தாவரங்கள் இந்த மாதிரி வெளியேற்றினால் அவைகள் உயிருக்கே ஆபத்தாகிவிடும். எனவே அவை இலைகளை வைத்துக் கொள்வதில்லை. ஆனால் இலைகள் இல்லையென்றால் அவை உணவு தயாரிக்கமுடியாது. இந்த இக்கட்டான நிலையை நாகதாளி, சவுக்குமரம் போன்றவை ஒருவாறு சமாளிக்கின்றன. இலைகளை இழந்து அல்லது செதில்களாக மாற்றித் தண்டுகள் இலைகளைப் போலமைந்து உணவு தயாரிக்கின்றன. ஆவியுயிர்ப்பையுங் கட்டுப்படுத்து கின்றன.

தட்டிப் பறிக்கும் மனிதரைப்போல், ஏய்த்துப் பிழைக்கும் மனிதரைப்போல் தாவரங்கள், விலங்குகளில் உண்டு. கொத்தான், ஊத்துமக் கொத்தான் என்று இரு வகைத் தாவரங்கள் உண்டு. இவை நிலத்தில் முளைத்துக் கொடியாக வளரும். பக்கத்தில் வேறு தாவரம் இருந்தால் அதைப் பற்றிக்கொண்டு நிலத்தோடு தம் தொடர்பைத் துண்டித்துக் கொள்ளும். ஆதாரம், உணவு முதலிய எல்லாவற்றிற்கும் தான் பற்றிய மரத்தையே நம்பி வாழும். இதனை ஒட்டுண்ணி என்பர். இதுபோன்ற ஒட்டுண்ணிகள் தான் கொழுக்கிப் புழு, நாடாப்புழு போன்றவை. இவை ஏய்த்துப் பிழைக்கும் நம் போன்ற மனிதரையே ஏய்த்து அவர்கள் உடலிலேயே அவர்களையே உண்டு வாழ் கின்றன என்றால் இந்த விந்தையைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ!

விதைகள் முளைத்து மரமாவதுபற்றித் தெரியும். ஆனால், இலைகள் மரமாவதுபற்றித் தெரியுமா? சதைகரைச்சான் என்ற செடியின் இலைகளைப் பிடுங்கி நட்டால் அதன் பக்கங்களிலிருந்து பல தாவரங்கள் வளரும். போகினியா என்ற தாவரத்தின் இலைகள் கிழிந்துவிட்டால் அதன் கிழிந்த பகுதியிலிருந்து புதுத் தாவரம் வளரும்.

இந்தவிதமாக இந்த உயிரினங்களின் செயல்பற்றி நாளெல்லாம் பொழுதெல்லாம் பேசலாம். பேசித் திரியும் மனிதரிலும் கூடிய சிறந்த விந்தைகள் புரியும் இந்த உயிரினங்கள் தம் பெருமைபற்றிப் பேசித் திரிவதில்லை. இது தான் நமக்கும் இந்தத் தாவர, விலங்கு உயிரினங்களுக்கு முள்ள வித்தியாசம்!

# மாணவர் மன்றம்

68. ஆர். இராஜலிங்கம், சென். மேரிஸ் மகாவித்தியாலயம்,
தியத்தலாவ.

69. பி. கிருஷ்ணநந்தன், ம. ம. வித்தியாலயம், நெல்லியடி.

70. நெல்லை ஐ நடேஸ், ,, ,, ,, ,,

71. சு. இரத்தினசிங்கம், மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்டக்களப்பு.

## கட்டுரைப் போட்டி

### முடிவு திகதி 31-12-69

'பரீட்சைக் காலமாகையாற் போட்டியிற் பங்கு பற்றுவது கஷ்டம்' எனப் பலர் அறிவித்தபடியினுல் கட்டுரைப் போட்டியின் முடிவு திகதி 31-12-69 ஆக மாற்றப்பட்டுள்ளது. போட்டியிற் பங்குபற்ற விரும்பு கிறவர்கள் கட்டுரையுடன் கட்டுரைப் போட்டிக் கூப் பனையும், அங்கத்தவராகச் சேர்ந்திராவிடில் மாணவர் மன்றப் பத்திரத்தையும், 50 சத முத்திரையையும் முடிவு திகதிக்கு முன்னர் அனுப்புக. — ஆசிரியர்


## வெற்றிமணி கிடைக்குமிடங்கள்

Meenambika News Agency,
235, Lower Street,
BADULLA.

அன்பு புத்தகசாலை,
27-D பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

# கணக்கியலுக்கோர் அறிமுகம் (19)

— வை. சி. சிவஞானம் —

**பரீட்சை மீதியின் மூலம் அறியக்கூடிய தவறுகள்:**

1. **ஒரு பதிவை மட்டும் பதிதல்:**

ஒரு வியாபார நடவடிக்கையின் பற்று அல்லது வரவுப் பதிவை மட்டும் பதிந்து அதன் எதிர்ப்பதிவைப் பதியாது விடல்

**உதாரணம்:** காசுக்கு விற்பனை 3500 என்றும் நடவடிக்கையை காசுக் கணக்கில் மட்டும் பதிந்து அதன் எதிர்ப்பதிவை விற்பனைக் கணக்கில் பதியாது விடல். ஏனைய முதலேடுகளின் கூட்டுத்தொகைகளைப் பேரேட்டுக்கு மாற்றும்போதும் எதிர்ப்பதிவுகள் செய்யாது விடப்படலாம்.

2. **பிழையான பக்கத்தில் பதிதல்:**

ஒரு வியாபார நடவடிக்கையின் இரு பதிவுகளையும் இரு கணக்கிலும் ஒரே பக்கத்தில் பதிதல்.

**உதாரணம்:** பெற்ற வாடகை 150 ரூபாவை காசுக்கணக்கில் பற்றுப் பாகத்திலும் வாடகைக் கணக்கிலும் பற்றுப்பாகத்தில் பதிதல்.

3. **பிழையான தொகைகளைப் பதிதல்:**

ஒரு வியாபார நடவடிக்கையின் இருபதிவுகளில் ஒரு பதிவில் சரியான தொகையைப் பதிந்து அதன் எதிர்ப்பதிவில் பிழையான தொகையைப் பதிதல்.

**உதாரணம்:** பெற்ற தரகு 57 ரூபாவைக் காசுக்கணக்கில் சரியான தொகை 57 ரூபாவையும் பதிந்து பெற்ற தரகுக்கணக்கில் 75 ரூபாவெனப் பதிதல்.

4. **பிழையான பக்கத்தில் பிழையான தொகையைப் பதிதல்:**

ஒரு வியாபார நடவடிக்கையின் இரு பதிவுகளின் ஒரு பதிவைச் சரியான பக்கத்தில் சரியான தொகையைப் பதிந்து எதிர்ப்பதிவைத் தவறான பக்கத்தில் பிழையான தொகையைப் பதிதல்

**உதாரணம்:** இராசு தந்த பணம் 175 ரூபாவைக் காசுக் கணக்கில் பற்றுப் பாகத்தில் சரியான தொகையாகிய 175 ரூபாவைப் பதிந்து இராசு கணக்கில் பிழையான பக்கமாகிய பற்றுப் பாகத்தில் பிழையான தொகையாகிய 157 ரூபாவைப் பதிதல்.

5. **பிழையான கூட்டுத் தொகை:**

பேரேட்டுக் கணக்குகள் முதலேடுகள் ஆகியவற்றின் தொகைகளைக் கூட்டும்போது உண்மையான தொகையிலும் பார்க்கக் கூடுதலாக அல்லது குறைவாகக் கூட்டுதல்.

6. **பரீட்சை மீதித் தவறுகள்:**

பேரேட்டுக் கணக்குகளின் தொகைகளைப் பிழையாகப் பரீட்சை மீதியில் பதிதல்.

**உதாரணம்:** வியாபாரச் செலவின் கூட்டுத்தொகை 875 ரூபா பரீட்சை மீதியில் பதியும்போது 785 ரூபா எனப்பதிதல்.

**பரீட்சை மீதியின் மூலம் அறியமுடியாத தவறுகள்**

1. **வியாபார நடவடிக்கைகளைப் பதியாது விடல்:**

மூதலேடுகளில் சில வியாபார நடவடிக்கைகளைப் பதியாது விடின் பரீட்சை மீதி பிழைக்காது. எனவே இத்தவறைப் பரீட்சை மீதியின் மூலம் காணமுடியாது.

**உதாரணம்:** இராமனிடம் கடன் கொள்முதல் 1500 இப்பதிவைக் கொள்முதலேட்டில் பதியத் தவறினுல் பின் பேரேட்டில் கொள் முதல் கணக்கிலும், இராசன் கணக்கிலும் பதியப்படாதிருக்கும். ஆயினும் பரீட்சை மீதி பிழைக்காது.

2. **தவருன தொகைகளை முதலேட்டில் பதிதல்:**

முதலேடுகளின் பிழையான தொகைகளைப் பதிவதால் பின் பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றும்போதும் இத்தவருன தொகைகளையே மாற்றுவதால் பரீட்சை மீதியில் வித்தியாசம் ஏற்படாது.

**உதாரணம்:** தேவனுக்கு விற்பனை 2570 ரூபாவை விற்பனை நாளேட்டில் 2750 ரூபாவெனப் பதிந்து பின் பேரேட்டிலுள்ள தேவன் கணக்கின் பற்றுப் பாகத்தில் 2750 ரூபாவென்றும் விற்பனைக் கணக்கின் வரவுப் பாகத்திலும் 2750 ரூபாவென்றும் மாற்றுவதால் பரீட்சை மீதி வித்தியாசப்படாது.

3. **ஈடாக்குந் தவறுகள்:**

   1. ஒரு கணக்கின் பற்றுப் பாகத்தைக் கூட்டும்போது கூடக் கூட்டிய தொகையை இன்னெரு கணக்கின் வரவுப்பாகத்தைக் கூட்டும்போது அதே தொகையைக் கூடக் கூட்டல்.

   2. ஒரு கணக்கின் பற்றுப்பாகத்தைக் கூட்டும்போது குறையுந் தொகையை இன்னெரு கணக்கின் வரவுப்பாகத்தைக் கூட்டும்போது குறைவாகக் கூட்டுதல்.

   இதேபோன்று பற்றுப் பாகத்தில் ஏற்படும் தவறுகளுக்கு ஈடாக வரவுப் பாகத்திலும் அதே தொகையளவுக்குத் தவறு நேர்ந்தால் பரீட்சை மீதியில் வித்தியாசம் ஏற்படாது.

4. **தவருன கணக்குகளில் பதிதல்:**

தவருன கணக்குகளில் சரியான பக்கத்தில், சரியான தொகைகளைப் பதிவதால் பரீட்சை மீதியில் வித்தியாசம் ஏற்படாது.

**உதாரணம்:** தளபாடக் கொள்முதல் 500 ரூபாவை தளபாடக்கணக்கில் பற்றில் பதிவதற்குப் பதிலாக கொள்முதல் கணக்கில் பற்றில் பதிவதால் பரீட்சை மீதியில் வித்தியாசம் ஏற்படாது. பரீட்சை மீதியில் வித்தியாசம் ஏற்படாது விடினும் இத்தவறுகளும் கணக்குகளைப் பாதிக்கும்.

**பரீட்சை மீதி காட்டாத தவறுகளைக் காணும் முறை:**

உரிய பத்திரங்களுடனும் கோர்வைகளுடனும் முதலேடுகள் பேரேடுகள் ஆகியவற்றை முறைப்படி கணக்குப்பரிசோதனை செய்வதன்மூலமே இத்தவறுகளைக் கண்டுபிடிக்கமுடியும்.

**கணக்குகளைச் சமப்படுத்தல்:**

ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பதியப்படும் கணக்குகளை இரு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. ஒரு குறிப்பிட்ட காலஎல்லையுடன் முடிவடையும் கணக்குகள்
2. தொடர்ந்து கொண்டு செல்லவேண்டிய கணக்குகள்.

பெயரளவுக் கணக்குகள், கொள்முதல் விற்பனை - திரும்பல்கள் இவை பெரும்பாலும் குறிப்பிட்ட கால எல்லையுடன் முடிவடையும் கணக்குகளாகும். இக்கணக்குகளின் மீதிகளை குறிப்பிட்ட கால முடிவில் வியாபாரக் கணக்கு அல்லது இலாப நட்டக் கணக்கு இவற்றுள் ஒன்றுக்கு மாற்றுவதுடன் முடிவடையும். இக்கணக்குகளின் வித்தியாசத் தொகையை குறைவான தொகையுள்ள பக்கத்தில் வியாபாரக்கணக்கு அல்லது இலாப நட்டக் கணக்குக்கு மாற்றப்பட்டது என எழுதிச் சமப்படுத்தல் வேண்டும்.

உதாரணம்: கொள்முதல் கணக்கின் பற்றுப்பாகக் கூட்டுத்தொகை 17500 வரவுப்பாகத்தில் எத்தொகையும் இல்லை. எனவே வரவுப் பாகத்தில் வியாபாரக் கணக்குக்கு மாற்றப்பட்டது. 17500 ரூபா என எழுதி இரு பக்கத்தையும் சமப்படுத்தல் வேண்டும். தரகுக் கணக்கின் பற்றுப்பாகக் கூட்டுத்தொகை 760 வரவுப் பாகக் கூட்டுத்தொகை 430 எனவே பற்றுப் பாகத்தில் கூடுதலாக இருக்கும் 330 ரூபாவை வரவுப் பாகத்தில் இலாப நட்டக் கணக்குக்கு மாற்றியது என எழுதி வித்தியாசத் தொகையையிட்டுச் சமப்படுத்தல் வேண்டும்.

தொடர்ந்திருக்க வேண்டிய கணக்குகள் மெய்க்கணக்கையும் பெயருள் கணக்கையும் சேர்ந்தவையாகும். இக்கணக்குகளின் இருபக்கக் கூட்டுத்தொகைகளின் வித்தியாசத்தையும் குறைவான பக்கத்தில் மீதி கீழே கொண்டு சென்றது என்ற விபரத்துடன் பதிந்து கணக்கைச் சமப்படுத்தல் வேண்டும்.

உதாரணம்: தளபாடக் கணக்கு பற்றுப்பாகக் கூட்டுத்தொகை 1200 வரவுப் பாகக் கூட்டுத்தொகை 120 பற்றுப்பாகக் கூடுதல் தொகையான 1080 ரூபாவை வரவுப் பாகத்தில் மீதி கீழே கொண்டு சென்றது. (மீ. கீ. கொ. செ.) என்ற விபரத்துடன் பதிந்து கணக்கைச் சமப்படுத்தல் வேண்டும்.

பரீட்சை மீதி தயாரித்துப் பரீட்சை மீதி சரியானதுந்தான் கணக்குகளைச் சமப்படுத்தல் வழக்கம்.

— தொடரும்

# நேயர் குரல்!

**எம். எம். முனுஸ்**
59, காமால் லேன்,
யாழ்ப்பாணம்.

வெற்றிமணி ஆசிரிய!

வெற்றிமணிப் பத்திரிகையைச் சில மாதங்களாக வாசித்து வருகின்றேன். அது எனக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்துள்ளது. மாணவர்களையும் சிறுவர்களையும் மகிழ்விக்கும் வெற்றிமணி அதிக பக்கங்களுடன் சிறப்புடன் வெளிவர வேண்டும் என விரும்புகின்றேன்.

**நெல்லை ஐ. நடேஸ்,**
ம. ம. வித்தியாலயம்,
நெல்லியடி.

வெற்றிமணி வாசித்தேன். மகிழ்ச்சிக் கடலில் அமிழ்ந்தினேன். இரசிகமணி கனக. செந்திநாதனின் 'ஓரக்கண் கடவுள்' - சாரதா, நயீமா-ஏ-பஷீர் திக்குவல்லை கமால் ஆகியோரின் கவிதைகள் - மு. க. சுப்பிரமணியம் அவர்களின் 'பெருமைப் பேச்சு' ஆகியவை என்னைக் கவர்ந்தன. சாதி - சமய வேறுபாடின்றி எல்லோருக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் வெற்றிமணியைப் பாராட்டுகின்றேன்!

**பேராசிரியர் வ. பெருமாள்,**
எம்.ஏ.பி.டி.எம்.ஆர்.ஏ.எஸ்.
முதல்நிலைக் கல்லூரி,
உரிகம் கோலார் தங்கவயல்,
மைசூர் - மாநிலம்.

பேரன்புடையீர்!

வணக்கம். தங்கள் ஏடான வெற்றிமணி' சிறந்தோங்க என் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக் உரியன.

வாழ்க வெற்றிமணி!

**S. முத்துராமன்,**
வள்ளியம்மை பாங்க்,
கொரனுட்டு கருப்பூர்,
கும்பகோணம் வழி,
தஞ்சை.

வெற்றிமணி ஆசிரியருக்கு!

வெற்றிமணி வளர்பிறை போல் வளர வேண்டுமெனப் பாராட்டுகிறேன்.

# வாழ்க மணமக்கள்!

| மணமகன் | மணமகள் |
|---|---|
| **செல்வன்** | **செல்வி** |
| **கந்தையா பரமாநந்தம்** | **சத்தியவதி சுப்பிரமணியம்** |
| (A. C. I. Ltd. இரத்மலானை) | குரும்பசிட்டி, |
| சங்கரத்தை. | தெல்லிப்பழை. |

# பேனு நண்பர் சங்கம்

22. அ. யோ. கில்பேட்,
இல. 5, ஆனந்தபுரம்,
புதுக்குடியிருப்பு.
வயது 17.

புதுக்குடியிருப்பு, மகாவித்தியாலயத்தில் க. பொ. த. ஆரம்ப வகுப்பிற் படிக்கும் இவர் உதைபந்தடிப்பதில் வீரர், உயரம் பாய்தலிலும் திறமையுடையவர். பத்திரிகை வாசித்தல், படங்கள் சேகரித்தல் என்பன இவரின் பொழுதுபோக்குகளாகும். ஆண்-பெண் இருபாலாரும் கடிதத் தொடர்புகொள்ளலாம்.

23. றெஸ்லின் கபூர்
இராமநாதன் கல்லூரி,
சுன்னுகம்.
வயது 17

க. பொ. த. உயர்தர கலைப் பிரிவு மாணவியாகிய இவருக்கு தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாஷைகள் தெரியும். பத்திரிகைகள், கதைப் புத்தகங்கள் படித்தல், வானொலி கேட்டல், படம் பார்த்தல் இவரின் பொழுதுபோக்குகளாகும். வலைப் பந்தாட்டம் இவருக்குப் பிரியமானது. 17—20 வயதுக்குட்பட்ட பெண்பாலார் மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவேண்டும். அவர் ஒரு கல்லூரி மாணவியாகவோ உத்தியோகம் பார்ப்பவராகவோ இருத்தல் நன்று. தமிழில் தொடர்பு கொள்க. தமிழகத் தோழிகளாயின் மகிழ்ச்சியுடன் வரவேற்பேன்.

24. ஆர். இராஜலிங்கம்,
534, கஹகொல்ல,
தியத்தலாவ.
வயது 19.

அறிந்த பாஷைகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் என்பனவாகும். கதை, கட்டுரை, கவிதை வாசித்தும் எழுதியும் பொழுதுபோக்கும் இவருடன் ஆண்—பெண் இருபாலாரும் கடிதத் தொடர்பு கொள்ளலாம்.

25. ச. இரத்தினசிங்கம்,
மெதடிஸ்த மத்திய கல்லூரி
விடுதி,
மட்டக்களப்பு.

க. பொ. த. வகுப்பிற் படிக்கும் இவரின் பொழுதுபோக்குகள் முத்திரைகள் - இயற்கைக் காட்சிப் படங்கள் சேகரித்தல், பத்திரிகைகள் வாசித்தல்-இரசித்தல் உதை பந்து விளையாடுதல் என்பனவாகும். இருபாலாரும் கடிதத் தொடர்புகொள்ளலாம்.




## சந்திரனே நாம் வருவோம்!

— வளலாயூர் செ. சிவசம்பு —

சந்திரனே நாம் வருவோமே
தண்ணொளி மண்ணில் தவழ்வோமே
அந்தமில் வெளியில் நடப்போமே
விந்தைகள் பலவும் புரிவோமே.

கையிற் கெட்டாத் தூரத்தில்
கடுகிச் சென்ற சந்திரனே
கையிற் றொட்டு விளையாட
கெதியில் நாமும் வந்திடுவோம்.

ஆம்ஸ்ரோங் மாமா உன்மீது
அடியை வைத்து விட்டாரே
தேம்பும் சிறுவர் நாமெல்லாம்
துள்ளி யாட வந்திடுவோம்.

ஔவைப் பாட்டி போலிருக்கும்
அழகு மலையின் எழில்காண
செவ்வான் வெளியைச் செய்மதியில்
செக்கனிற் கடந்து வந்திடுவோம்.

ஈர்ப்புக் குறைந்த உன்தரையில்
எளிதாய் எம்பிக் குதித்திடுவோம்
பாரில் ஆடா ஆட்டமெல்லாம்
பளிங்கு மதியில் ஆடிடுவோம்.

வளியும் நீரும் இல்லாத
குழியும் மேடும் நிறைந்திருக்கும்
ஒளியை நல்கும் சந்திரனுன்
எழிலைக் காண வந்திடுவோம்.

## வண்ணப் பூக்கள்!

—: த. அப்புத்துரை :—

சின்னச் சின்னப் பூக்கள்
சிங்காரப் பூக்கள்
என்னைப் போல மகிழ்ந்து
சிரிக்கும் முல்லைப் பூக்கள்!

வண்ண வண்ண நிறங்கள்
வடிவுடைய பூக்கள்
எண்ண எண்ண இனிக்கும்
எழிலுடைய பூக்கள்!

கண்ணைக் கவரும் பூக்கள்
காண நல்ல பூக்கள்
மண்ணில் செழித்து வளரும்
மண முடைய பூக்கள்!

இனிய தேனைச் சேர்க்கும்
இத முடைய பூக்கள்
புனித மாக எடுத்து (ப்)
புகழ்ந்து மாலை செய்வோம்!

—¦—

## உழைத்து வாழ்வோம்

எஸ். ஹபீப்பு முகம்மது, சலீமா ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு.

என்னரும் தோழா எழுந்திடடா
ஏழ்மை நீங்கிட உழைத்திடுவோம்
காட்டை அழித்துச் செப்பனிட்டு
களனி யாக மாற்றிடுவோம்
பிறநாட்டை நம்பி வாழாது
பிறந்த நாட்டை உயர்த்திடுவோம்

உழவன் உழைக்கா திருந்திட்டால்
உண்ணச் சோறும் கிடைத்திடுமா?
உழைப்பால் உயரப் பாடுபட்டு
உணவுப் பஞ்சம் நீக்கிடுவோம்
உத்த மனுய்நாம் வாழ்ந்திடுவோம்
உண்மை பேசி மகிழ்ந்திடுவோம்.

## காதலைத் தருகின்றாள்!

—| கே. எம். பாறூக், மெயின் வீதி, பதியதளாவ. |—

வண்ணத் தேரில் வருகின்றாள்
தேனின் சுவையைத் தருகின்றாள்
தன்னைக் காண வருகின்றாள்
அன்பை அள்ளித் தருகின்றாள்.

அன்பைப் பண்பை இணைத்திடவே
இன்ப வாழ்வைப் பிணைத்திடவே
மாலை ஏந்தி வருகின்றாள்
மலரின் மணத்தைத் தருகின்றாள்.


அன்பில் அழகைக் களித்திடவே
அமுத உணவை அளித்திடவே
அன்பின் உருவாய் வருகின்றாள்
ஆசை நெஞ்சைத் தருகின்றாள்.

புதிய நினைவு பிறந்திடவே
பூமகள் நெஞ்சில் நிறைந்திடவே
நதியின் நீராய் வருகின்றாள்
புனிதக் காதலைத் தருகின்றாள்!

-o-o-

## கட்டுரைப்போட்டி விதிகள்

1. மாணவர் மன்ற அங்கத்தவர்கள் மாத்திரம் இப் போட்டியிற் பங்குபற்றலாம்.
2. ஒருவர் ஒரு கட்டுரை மாத்திரம் அனுப்பலாம்.
3. கட்டுரையுடன் கட்டுரைப் போட்டிக் கூப்பனையும் இணைத்து அனுப்ப வேண்டும்.
4. குறிப்பிட்ட சொற்களுக்குமேல் கட்டுரை இருக்கக் கூடாது.
5. கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதவேண்டும்.
6. போட்டி முடிவு திகதிக்குப் பின் கிடைக்கும் கட்டுரைகள் போட்டிக்குச் சேர்க்கப்படமாட்டா.
7. முன் வெளிவந்த, வேறு ஒருவரால் எழுதப்பட்ட கட்டுரைகளின்றிச் சுயமாக எழுதப்படும் கட்டுரைகளை அனுப்புக.




## — பன்னிரண்டு மணி —

து. குகதாசன், நடேஸ்வராக் கல்லூரி.

அன்று நாத்தார் திருநாள். இரவு பன்னிரண்டு மணியிருக்கும். எட்டுத் திக்குகளிலும் வெடிகள் பளீர்! பளீர்! என வானத்தைப் பிளந்தன. வீதியில் மின்குமிழ் வரிசையாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அந்த மின் விளக்கின் கீழ் ராமு என்ற சிறுவன் ஆழ்ந்த யோசனையுடன் இருந்தான். அவன் முகம் யாரையோ எதிர்பார்ப்பது போற் காட்டிற்று. அவன்தான் யாவன்...? வேறுயாருமல்ல, வேட்டைக்குச் சென்ற தன் தகப்பனை எதிர்பார்த்திருந்தான். மின்னி, மின்னி விளங்கிக்கொண்டிருந்த நட்சத்திரங்கள் மறைந்தன. கருமுகிலில் மின்னல் தவழ்ந்தது. குளிர் காற்று ஜில் என்று வீசியது. சோவென மழை பொழிந்தது. உடனே ராமு எஸ்க்கிமோவருடைய வீடு எனச் சொல்லத்தக்க தனது சிறு குடிசைக்குள் சென்றான். சிறிது நேரத்தின் பின் தந்தை தோளில் ஓர் மிருகத்தைத் தூக்கிக்கொண்டு மழையில் நனைந்தபடி வீடு வந்து சேர்ந்தார். ராமு தகப்பனுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்தான். கோயிலுக்குப் போவதற்கு ராமு முயன்றான். ஆனால் தகப்பன் நித்திரைக்குச் சென்றுவிட்டார். வீட்டில் இருந்தபடியே ஆண்டவனை வணங்கிவிட்டு உறங்கிவிட்டான்.

சூரியன் தன் கரங்களை நீட்டிக்கொண்டு கிழக்கே உதித்தான். ராமு கண்ணைக் கசக்கிக்கொண்டு தலையை நீட்டினான். திடீரென பயத்தால் நடுங்கினான். சமாதானம் கூறிப்பார்த்தான். இப்போதே பணத்தைத் தரும்படி ஒற்றைக்காலில் நின்றான் இரும்புக்கடைக்காரன். பரிவு காட்டச்சொல்லி இரந்தான். வியாபாரத்தில் இரக்கமில்லை என முறைத்தான். கடைசியில் இரவு கொண்டுவந்த அந்த இறைச்சியை விற்று, பணத்தைக் கொடுத்தான். பாவம் .. அன்று ஒரே பட்டினி. வேதனை தாங்க முடியாமல் மடமட என தண்ணீரைக் குடித்தான். சூரியன் தலைக்கு நேரே வந்தான். இருவரும் நொந்த மனதுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றார்கள். எங்கும் அலைந்து தேடினார்கள். ஒன்றுமே அவர்கள் கண்ணில்படவில்லை. மிக்க களைப்புடன் ஓர் மரத்தின் கீழ் இருந்தார்கள். மேற்கே வானம்

ஈமத்தீபோல் சிவந்தது. சுடுகாட்டு நரிகள் ஊளையிடும் சத்தம் ஒலித்தது. ஆந்தைகளின் அலறல் ராமுவின் நெஞ்சை குத்திக் குத்தி பயத்தில் ஆழ்த்தியது. அந்த நேரத்தில் ராமுவின் தகப்பன் சுருட்டை வாயில் வைத்துக்கொண்டு, சுருள் சுருளாகப் புகையை விட்டுக் கொண்டிருந்தார். திடீரென ராமு அப்பா என்று கத்தினன். அதிர்ச்சியினல் மடக்கென்று சுருட்டை விழுங்கினர். துப்பாக்கியை எடுத்து வந்த புலியைச் சுட்டார். என்னே அதிசயம் துப்பாக்கியில் இருந்து குண்டு வெளிப்படவில்லை. உடனே இருவரும் சேர்ந்துஓடினர்கள். ராமுவின் தகப்பன் மரம் தடுக்கி நிலத்தில் வீழ்ந்தார். பின்னல் வந்த புலி உருட்டி உருட்டிக் கடித்தது. இப்பயங்கரக் காட்சியைக் கண்டதும் ஐயோ! என்று கத்திக்கொண்டு மனம் போன போக்காக ஓடினன். கடைசியில் பட்டணத்துக்குள் வந்து நுழைந்தான். ஒருவரை ஒருவர் விலத்த முடியாத சன நெருக்கம், அத்து மீறிய பயத்தினலும், களைப்பினலும் ராமு, நெஞ்சு வலிக்கிறதே எனக் கத்திக் கொண்டு மயங்கி வீழ்ந்தான். காலையில் விழித்துப் பார்த்தான். மருத்துவ மனையில் இருப்பதை உணர்ந்தான். ராமு தன் கதையை கண்களில் இருந்தும் கண்ணீர் ஆருகப் பெருக டாக்டரிடம் கூறினன். டாக்டர் அவனை நன்ருகப் பரிசோதித்துப்பார்த்துவிட்டு உன்னுடைய நோய் வெகு விரைவில் குணமாகிவிடும் என்று கூறிவிட்டுச் சென்ருர். அனதைப் பிள்ளைகட்கு அரசாங்கம் சொற்ப பணம் கொடுப்பது வழக்கம். அப்படியே ராமுவுக்கும் கொடுக்கப்பட்டது. ஆனல் ராமு பணத்தை செலவு செய்யாது சேகரித்தான்.

ராமுவைப் பார்ப்பதற்கு யாருமே வருவதில்லை. யாரும் தன்னைப் பார்ப்பதற்கு வருவார்களா என எதிர்பார்த்திருந்தான். கடைசியில் அது கைகூடாமல் போகவே படுக்கைக்குச் சென்று விடுவான். இப்படியாக அவன் ஒவ்வொரு நாளையும் துன்பமாகவே கழித்து வந்தான். யாரையாவது வரவழைக்க வேண்டுமென நினைத்து, அன்று இரவு களவாக வெளியே சென்று காதாட்டிக் கந்தப்பிள்ளை என்பவரிடம் சொற்ப பணம் இரந்து நாளை தருவதாகக் கூறி வாங்கிக் கொண்டு தன் படுக்கைக்குச் சென்ருன். இரு நாட்கள் சென்றும் பணத்தைக் கொடுக்காததினலே கந்தப்பிள்ளை அவனிடம் சென்ருன் அவனுக்கு சமாதானம் கூறி நாளை தருவதாக அனுப்பினன். இப்படியாக நாளை, நாளை என்று ஏமாற்றியே வந்தான். இதனல் இவனுதல் தன்னிடம் வந்து போகிருன் என்பதையிட்டு ராமு சந்தோஷமடைவான்.

ஒரு நாள் தன்னிடம் இருக்கும் பணத்தை எண்ணிக்கொண்டிருக்கையில் ஒரு ரூபாய் தவறி டாக்டருடைய பெரிய மேசையின் கீழ் சென்றது. சிறு பிள்ளை தவழ்கின்ற மாதிரி தவழ்ந்து மேசையின் கீழ் சென்ருன். அவன் மேசையின் கீழ் சென்றது அங்கு நின்ற யாருக்குமே தெரியாது. அப்போது ஓர் வேலையாள் ராமுவுக்கு என்ன மருந்து கொடுப்பதென டாக்டரிடம் கேட்டான் ''அவனுடைய

நோயை இனி மாற்ற இயலாது. புற்றுநோய் தவிர்க்கமுடியாமல் பரவிவிட்டது. அவன் இன்னும் இரண்டு நாட்கள்கூட இருப்பானே என்பது சந்தேகமாய் இருக்கிறது. ஆகையால் அவன் இருக்குமட்டும் என்ன கேட்கிறுனே அதைக் கொடு என்று கூறி அனுப்பினர். இவை அனைத்தையும் ராமு செவியை வேறு எங்கும் சாய்க்காமல் கேட்டுக் கொண்டே இருந்தான். அவன்பட்ட வேதனைக்கு அளவே இல்லை. கண்களில் இருந்தும் கண்ணீர் ஆறுகப் பெருக மேசையின் கீழ் இருந் தும் எழுந்தான். டாக்டரைக் காணவில்லை. எறும்பூர்ந்து செல் வதைப்போல் தன் படுக்கைக்குச் சென்றுன். வேதனை தாங்க இய லாது கட, கட என சிரித்தான். பின் மட மட வென கூசாவிற்குள் இருந்த தண்ணீரைப் பருகினுன். திடீரென ராமு கொம்! கொம்! என இருமினுன். டாக்டரும், வேலையாட்களும் ஓடிவந்தார்கள். டாக் டர் ஓர் ஊசியைப் போட்டார். அவனுக்குக் கொஞ்ச தென்பு வந் தது. எல்லோரையும் ஏறிட்டுப் பார்த்தான்... எனது அப்பா, அம்மா யாவரும் இரவு பன்னிரண்டு மணிக்கே என்னைவிட்டு நீங்கினுர்கள். அவர்களுடன் வாழக்கொடுத்து வைக்கவில்லை. என்றுலும் அவர்கள் போன நேரத்திலேயாவது நான் சாகக்கூடாதா எனக் கூறிக் கொண்டு ஏன் டாக்டர் விளக்கை அணைத்தீர்கள் என்று கேட்டான். ஆனுல் எல்லா விளக்குகளும் பிரகாசித்துக் கொண்டே இருந்தன. ராமு தன் நிலைமையை உணர்ந்தான். படுத்தபடியே, இந்தப் பணத்தை கந்தப்பிள்ளையிடம் கொடுக்கும்படி கூறி டாக்டரின் கைக் குள் திணித்தான். அப்போது டாங்! டாங்! என ஒலியை வரவழைத் துக் கொண்டு பன்னிரண்டு மணியைக் காட்டியது. மணிக்கூட்டைப் பார்த்தபடியே கண்ணை மூடினுன். ஒரே அமைதி சுவரில் கீறிய சித்தி ரத்தைப்போல் எல்லோரும் அசையாமல் நின்றுர்கள். கந்தப்பிள்ளை மிக்க ஆத்திரத்துடன் பணத்தைப் பெறுவதற்காக அங்கு வந்தார். டாக்டர் பணத்தை நீட்டினுர். கந்தப்பிள்ளையின் கையில் இருந்து பணம் ராமுவின் பிணத்தில் சொரிந்தது. அங்கு நின்ற எல்லோரும் தம் கண்ணீராலே மஞ்சனமாட்டினுர்கள். ராமு தான் நினைத்த பாக் கியத்தைப் பெற்றுவிட்டான்.

* * *

## தாய் சொல்லைத் தட்டாதே

நா. நடனசபாபதி, குமுளமுனை.

மதிபதனபுரம் என்னும் நகரத்திற் கயலிலே மதிசீலபுரம் என் னும் கிராமம் ஒன்றுள்ளது. இக் கிராமத்தில் ஒரு விதவை வசித்து வந்தாள். அவளுக்கு இராமன் என்னும் ஒரே ஒரு புதல்வன் இருந் தான். இராமன் பதினெட்டு வயதாகியும் வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருப்பது கண்டு தாய் மனம்வருந்தினுள். ஒரு நாள் மகனை அழைத்துப் புத்திமதி கூறி வேலைக்கு அனுப்பினுள்.

அவன் உணவருந்திவிட்டு வேலை தேடிச்சென்றான். ஒரு ஆசிரியர் அவனை அழைத்து வேலை செய்யும்படி தன் தோட்டத்திற்கு அனுப்பினார். வேலை முடிந்து வந்தபோது ஆசிரியர் ஐந்து ரூபா கொடுத்தார். இராமன் வீட்டுக்கு வரும்போது நண்பர்கள் ஓர் ஆற்றடியில் நின்று விளையாடினார்கள். அவர்களுடன் இராமனும் விளையாடிய போது பணத்தைத் தவறவிட்டுவிட்டான்.

பின் கவலையுடன் சென்று நடந்தவற்றைத் தாயிடம் கூறினான். தாய் கவலையுடன் ''இனிமேல் யாராயினும் கூலி தந்தால் உன் பையினுள் போட்டுக்கொண்டு வா'' என்றாள்.

இராமனும் மறுநாள் ஒரு குயவன் மனையை அடைந்தான். அங்கு வேலை செய்து முடிந்தபின் குயவன் ஒரு சட்டியைக் கொடுத்தான். அதை அவன் பையுள் இடமுனைந்தபோது அது தவறி உடைந்துவிட்டது. மறுநாளும் கவலையுடன் சென்று நடந்ததைக் கூறினான். தாய் மனவருத்தத்துடன் மகனே ''இனி யாராயினும் இப்படி ஏதும் கூலி தந்தால் தலையில் வைத்து வா'' என்று கூறினாள். மறுநாள் ஓர் இடையன் வீட்டுக்குச் சென்றான். அங்கே மாடுகளை மேய்த்தான். மத்தியானவேளை மாடுகளை ஒப்படைத்துவிட்டு கூலி கேட்டான். அப்போது அம்மாட்டுக்காரன் வெண்ணெயைக் கூலியாகக் கொடுத்தான்

இராமன் வெண்ணெயைத் தன் தலையில் வைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றான். அப்போது வெண்ணெய் உருகி வழிந்தது. வீடு சென்றதும் வெண்ணெய் நீராகிவிட்டது.

தாய் கண்டதும் தன் மகனுக்குப் படிப்பிக்கமுடியாமல் போனதையிட்டுக் கண்ணீர் விட்டாள். மீண்டும் இராமனைப் பார்த்து ''இப்படியானவைகளை கையில் கொண்டு வரலாமே'' என்றாள். மறுநாள் இடையன் வீட்டுக்குச் சென்று பால் காய்ச்சினான். பின் அவ் விடையன் ஒரு பூனையைப் பிடித்துக் கொடுத்தான். இராமன் கையில் கொண்டுசென்றபோது பூனை விறுண்டிவிட்டு ஓடிவிட்டது.

தாய் கவலை அடைந்தாள். தன் மகனை அழைத்து புத்திமதிகள் பல கூறி ''இனிமேல் இப்படியாரும் தந்தால் கயிற்றால் கட்டி இழுத்து வா'' என்றாள். அப்படி மறுநாள் ஓர் இறைச்சிக்கடையை அடைந்து வேலை செய்தான். வேலை முடிந்ததும் ஓர் இறைச்சித்துண்டைக் கடைக்காரன் கூலியாகக் கொடுத்தான். தாய் சொன்னபடியே கயிற்றால் கட்டிஇழுத்து வந்தான். இறைச்சித்துண்டை நாய்கள் தெருவீதியில் இழுத்துப் பிய்த்துவிட்டன.

இராமன் மென்மேலும் கலங்கினான். மறுநாள் தான் எப்படியும் பணம் உழைக்கவேண்டும் என்னும் எண்ணத்துடன் வீடு சென்றான். தாய் கண்டதும் கலங்கி இருவரும் அழுதனர். பின் தாய் அவனைத்

தேற்றி ''இனிமேல் இப்படியானதைக் கையில் கொண்டு வா'' என்றுள். மறுநாள் இராமன் ஒரு தச்சன் வீடு சென்று அங்கு தொழில் செய்தான். வேலை முடிந்ததும், ஒரு கதவு கூலியாகக் கிடைத்தது. அதை கவனமாகத் தூக்கிக் கொண்டு சென்று விற்றுத் தாயிடம் பணம் கொடுத்தான். தாய் சந்தோஷத்துடன் ''ஏன் மகனே கையில் கொண்டு வந்தாய்? பாரமான சாமான்களைத் தோளில் வைத்து வந்தால் இலகுவாக இருக்கும்'' என்றுள். மறுநாள் கழுதை மேய்க்கும் இடம் சென்று கழுதை மேய்த்தான். வேலை முடிந்ததும், ஒரு கழுதை கிடைத்தது. தாய் கூறியபடி கழுதையை தோளில் வைத்து அரண்மனை வீதி வழியால் தன் வீடு நோக்கிச் சென்றுன். அப்போது ஒரு அரண்மனையினுள் சிரிப்புக் கேட்டது. அரசனும் பரிவாரமும் அவ் அறைக்குச் சென்று பார்த்தனர். அப்போது, இராமன் கழுதையுடன் சென்றதைக் கண்டு இராசகுமாரி சிரித்தாள். இவ் இராசகுமாரியை சிரிக்கவைப்பதற்குப் பல மாந்திரீகர்களும், வேறு பலரும் முயன்றும் முடியவில்லை. எனவே அரசன் இப்பெண்ணைச் சிரிக்கச் செய்பவனுக்குப் பட்டம் கட்டி பாதி அரசு கொடுப்பதாகக் கூறியிருந்தான். எனவே அரசன் இராமனைக் கூப்பிட்டான். தாயையும் அழைப்பித்தான். நடந்தவற்றைத் தாய்க்குக் கூறி இராமனுக்குப் பட்டம் கட்டி தன் மகளை விவாகம் செய்து வைத்தான். இராமன் தன் தாயை இராசமாளிகையில் இருத்தி மகிழ்ந்தான். இராமன் விவேகம் இல்லாது போனுலும் தாய் சொல்லைத் தட்டாமல் நடந்து வந்ததால் ஈற்றில் ஒரு நாட்டையே ஆண்டான்.

***

## சிங்கள மன்னனின் சிங்ககிரி

கு. சிவபாலராஜா, வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை.

எமது பண்டைய சிங்கள மன்னர்களின் அழியாச் சின்னங்களுள் சிங்ககிரியும் ஒன்று. இதற்குச் சீகிரி, சிகிரியா போன்ற இன்னும் பல பெயர்களும் உண்டு. இலங்கையின் பழைய நகரமான பொலநறுவைக்கு மேற்கே அமைந்துள்ள சிங்ககிரி ஒரு மலை அரணுக இன்று காட்சியளிக்கிறது. சிங்ககிரியைப் பார்த்து அதிசயிக்காத யாத்திரீகள் இல்லையெனலாம். ஆனுல் மாணவர்களாகிய உங்களில் பெரும்பாலானேர் சிங்ககிரியைக் கண்டிருக்க மாட்டீர்கள். ஆகவே சிங்ககிரியைப் பற்றிய சில சுவையான செய்திகளை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

ஐந்தாம் நூற்றுண்டளவில் இலங்கையை ஆண்ட காசியப்பன் என்னும் சிங்கள மன்னனே சிங்ககிரி மலையரணை அமைத்தான் என்று கூறப்படுகிறது. அவன் தனது தந்தையைக் கொன்ற காரணத்தால் நாட்டு மக்களின் எதிர்ப்புக்குப் பயந்தும், தனது சகோதரன் முகலானன் என்பவனின் படையெடுப்புக்கு அஞ்சியும், சிகிரிக் குன்றில்

தனது மாளிகையை அமைத்தான். அதையே சிங்ககிரி என அழைக்கின்றனர். சிங்ககிரி மலைக்குன்று நில மட்டத்திலிருந்து சுமார் 600 அடி உயரமானது. அதன் உச்சிக்கு ஏறி அங்குள்ள மாளிகையைப் பார்க்க விரும்புவோர், முதலில் கீழே உள்ள படிக்கட்டுகள் மூலம் ஏறத் தொடங்க வேண்டும். இப்படிக் கட்டுக்கள் நாம் நினைப்பது போல இன்று வழுவழுப்பாகவோ அன்றித் திருத்தமானதாகவோ இல்லை. பல வருடங்கள் பழமை வாய்ந்தன ஆதலால் அவை இடிபாடுற்றுக் காணப்படுகின்றன. அவற்றுள் தற்காலத்தில் புதுப்பிக்கப் பட்ட படிகளையே நாம் அதிகமாகக் காணலாம்.

இவ்வாறு படிக்கட்டுக்களைக் கடந்து அப்பாற் சென்றதும், ஒரு ஒடுங்கிய பாதை இருப்பதைக் காணலாம். அப் பாதை கற்பாறையில் செதுக்கப்பட்டு, அருகே பிடித்து ஏறுவதற்கு உதவியாக இரும்புக் கம்பிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இந்தப்பாதை தற்காலத்தில் அமைக்கப்பட்டதே. இதையடுத்து எமக்கு வியப்பைத் தருகின்ற ஒரு காட்சியைக் காணலாம். அதாவது; கண்ணுடிச் சுவர் என்று சொல்லப்படும் ஒரு நீண்ட சுவரை நாம் காணலாம். இச்சுவர் பார்வைக்கு வழு வழுப்பாகவும், கண்ணுடி போன்ற பிரகாசத்துடனும் காணப்படும். பண்டைக் காலத்தின் கட்டிடக்கலை விருத்தியை எடுத்துக் காட்ட இதுவொன்றே போதுமானது. ஆயினும் இந்தக் கண்ணுடிச் சுவரின் அழகு காலவோட்டத்தால் கெட்டு விட்டது என்றே கூறலாம். கண்ணுடிச் சுவர்களின் அழகில் ஈடுபட்டுக்கொண்டு ஒரு ஒடுங்கிய பாதை வழியாக நாம சென்ருல், சற்று நீண்டதொரு வெளியை அடையலாம். இங்குதான் சிங்க வாயில் எனப்படும் ஒரு அதிசய வாயில் உண்டு. சிங்ககிரி என்று பெயர் உண்டாவதற்குக் காரணமாக இந்த வாயிலில் ஒரு படுத்திருக்கும் சிங்கத்தின் கால் நகங்களைப் போன்ற பாரிய உருவத்தைக் காணலாம். இந்த வாயிலின் இரு பக்கங்களிலும், ஒரு சிங்கத்தின் முன் கால்களைப் போன்ற நகங்கள் அமைந்திருந்பதைக் காணலாம். மிகவும் கடினமான பொருளினுல் இந்தச் சிங்க நகங்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். சிங்க வாயிலின் முகப்பை அலங்கரிப்பது அங்கு இரு பக்கங்களிலும் அமைக்கப் பட்டிருக்கும் சுட்ட செங்கற் கட்டிடமேயாகும். இச் செங்கற் சுவர்கள் இரண்டும் வாயிலுக்கு அழகைக் கொடுக்கின்றன.

சிங்க வாயிலினூடாக இன்னும் மேலே ஏறிச் சென்ருல்தான் மன்னன் வாழ்ந்த மாளிகையை அடையமுடியும். இந்தப் பாதை தான் மிகவும் கஷ்டமானது. ஏனெனில் செங்குத்தாகக் கற்பாறையில் செதுக்கப்பட்டிருக்கும் படிக்கட்டு வழியே அருகில் அமைக்கப் பட்டிருக்கும் இரும்புக் கம்பியைப் பிடித்துக் கொண்டு மேல் நோக்கி ஏறுதல் வேண்டும். இவ்வாறு உச்சியை அடைந்தால் பழைய செங்கற்களால் கட்டப்பட்டு இன்று அழிவுற்றுக் கிடக்கும் அரச மாளிகையைக் காண முடியும். எல்லாம் அழிந்துபோக இன்று எஞ்சியிருப்பது வீட்டின் அத்திபாரம் போன்ற செங்கற் கட்டிடமேயாகும்.

இங்கு ஒரு ஏரி இருந்தமைக்கு அறிகுறி காணப்படுகிறது. அந்த ஏரி அழிவுற்று இன்று மழை நீரினல் நிரப்பப்பட்டுள்ளது. பின்னர் நாம் வந்த வழியாகவே கீழே இறங்கி சிங்க வாயிலை அடைந்து பின் அங்கிருந்து, கண்ணுடிச் சுவர்களின் அருகாகச் சென்று, இன்னெரு புதிய இடத்தையடையலாம். மிக வேடிக்கையான, சுற்றுப் பாதை வழியாக மேலே சென்ருல் அங்கு ''சிகிரிச் சுவரோவியங்கள்'' என்று வர்ணிக்கப்படும் ஓவியங்களைக் காணலாம். இவை கற்பாறையில் செதுக்கப்பட்டு அழகான வர்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன. பெண்களைப் போன்ற உருவங்களை இது குறிக்கிறது. உலகிலேயே அதிசயிக்கத்தக்க முறையில், பல மேற்கு நாட்டினராலும் வியந்து பாராட்டப்படும் முறையில் இவ்வோவியங்கள் வரையப்பட்டுள்ளன.

மாணவர்களே! நீங்கள் சிங்ககிரிக்குச் செல்லாதிருந்தால் இன்றே உங்கள் பெற்ருர் அல்லது ஆசிரியருடன் சென்று பார்த்து அதன் அழகை ரசியுங்கள்.

★

# குறும்பு செய்யும் குழந்தை விநாயகன்

— நல்லைக் கணபதிப்பிள்ளை, 270, பாரதி புரம், கிளிவெட்டி. —

சிவபெருமானுக்கும், உமையம்மையாருக்கும் அன்று பொழுதே போகவில்லை. சுற்ருடலும் ''உம்'' என்ற மௌனத்தை அரவணைத்துக்கொண்டிருந்தது. அப்போது...

சிறு குழந்தை ஒன்றின் மழலைமொழி கேட்டுச் சற்றே திரும்பினள் உமையம்மை. பால்வடியும் வதனமும், கொழுக்கட்டை மேனியும், சிவந்த பாதங்களுமாகத் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தான் விநாயகன். சிவபெருமானுடைய கண்களிலும் இக் காட்சி பட்டுவிடவே இருவரும் துள்ளியெழுந்துசென்று விநாயகனின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொருவராக அமர்ந்து கொள்கின்றனர். ''அம்மையே! முத்தமொன்று தருவீரா?'' என்று உமையம்மையார் கேட்டுவிட்டு விநாயகனின் முகத்தோடு தன் முகத்தைப் பதிக்கக் குனிந்த அதேவேளையில், சிவபெருமானும் குழந்தையில் முத்தங் கொள்வதற்காகக் குனிந்தார். இவ்வேளையிலே குறும்புக்காரச் சிறுவனன விநாயகர், சிறிது பின்பக்கமாகத் தன் முகத்தை இழுத்துக் கொள்கிருர். தம் குழந்தையில் முத்தங்கொள்ள முனைந்த இருவர் முகமும் ஒன்ருேடொன்று மோத, தாமே முத்த

மிட்டுக் கொள்கின்றனர். இக் காட்சியைக் கண்ட குழந்தை விநாயகர் கை கொட்டி, சின்னச் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டுப் பேசாமல் இருந்துவிடுகிறுர். குழந்தையில் முத்தங் கொள்ள நினைத்து தாம் முத்தங் கொண்டுவிட்டதை நினைந்த சிவபெருமானும், உமையம்மையாரும் வெட்கத் தால் நாணிக் கோணி நிற்கின்றனர்.

தன் தாய், தந்தையருடனேயே இவ்வாறு குறும்பு செய்யும் குழந்தை விநாயகர் எம் முள்ளத்திலும் வந்து குடியேறிக் குறும்பு செய்ய - இன்னல் துடைக்க - அவனது செந்தாமரைப் பாதங்களை எம் தலையிற் சூடுவோம் என் கிறுர் இவ் வெழிலான கவிதை தந்த கவிஞர்.

''மும்மைப் புவன முழுதீன்ற
முதல்வி யோடும் விடைப்பாகன்
அம்மை தருக முத்தமென
அழைப்ப வாங்கே சிறிதகன்று
தம்மில் முத்தங் கொளநோக்கிச்
சற்றே நகைக்கும் வேழமுகன்
செம்மை முளரி மலர்த்தாளெம்
சென்னி மிசையிற் புனைவோமே''

என்னும் உணர்ச்சி ததும்பும் இப் பாடலைப் படிக்கும்போது எமது உள்ளம், எம்மைவிட்டுப் பறந்து விநாயகனிடம் முத்தங்கொள்ளச் செல்லத் துடிக்கின்றதல்லவா!

## சுகாதார வாழ்வுக்கு!

—≥ ஆ. ஆரோக்கியநாதர் – தும்பளை ≤—

இன்றல்ல! நேற்றல்ல!! சிறுவர் மரணவிகிதம் பல ஆண்டுகளாகவே அதிகரித்து வந்துள்ளது. இவ் விகிதத் தைக் குறைக்க அதிகார வட்டாரங்களிலும் ஆவலிருந்து வந்துள்ளதென்பது உண்மையே. சிறுவர் மரண விகிதத் தைக் குறைப்பது பொது ஜனப் பொறுப்பு என்பதை உயர்தர அதிகாரிகள் உணர்ந்துள்ளனர் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. ஆனல், பிரச்சினையை உணர்ந்தால்

மட்டும் போதாது. பிரச்சினையைத் தீர்த்துவைக்கக்கூடிய தீவிரமான நடவடிக்கைகளிலும் அரசாங்கம் ஈடுபட வேண்டும்.

சிறுவர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டுச் சிறுவர்கள் மரணமடைகின்றனர். ஆகையால், இத் தொழிற்சாலைகளுக்கான சட்ட விதிகளைத் தீவிரமாக அமுல் நடாத்தத் தொழில் இலாகாவும், கொழும்பு மாநகர சபையும் கூட்டாகத் திட்டமொன்றைத் தயாரித்துள்ளன. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சுப் புகையாலும் சுகாதாரத்திற்குக் கேடு விளைகிறது.

பொதுச் சுகாதாரக் கல்வி இயக்கமொன்றை நடாத்தவும் திட்டமொன்று தீட்டப்பட்டுள்ளது. ஆனால், அனுபவ வாயிலாக இத் திட்டங்களை ஆராயின் இத் திட்டங்கள் பூரண பலன் தரமாட்டா வென்றே கூறவேண்டியுள்ளது. தொழிலாளர்களை அமர்த்தாமலே பலர் சொந்தமாக ஆபத்தான தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். தொழிற்சாலைச் சட்டங்களின் பல விதிகளை இவர்கள் விஷயத்தில் அமுல் நடத்தமுடியாது. இன்றுள்ள தண்டனைச் சட்ட விதிகள் பல இன்றுள்ள சூழ்நிலையில் அமுல் நடத்தப்பட முடியாதனவாயும் அமைந்துள்ளன. சுகாதாரக் கல்வி நாடு முழுவதும் போதிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

சுகாதாரக் கல்வியானது நீண்டகாலத் திட்டமாகவே கருதப்படவேண்டும். இத் திட்டமானது மறுமுகமான பலனையே தரக்கூடியதென்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போதனைகளில் அதிக நேரத்தை வீணுக்காமல் சாதனைகளிலேயே உடனடியாக அதிக கவனஞ் செலுத்தவேண்டும். பொதுச் சுகாதாரத்திற்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய புகை எழும்பக்கூடிய நடவடிக்கைகளிலீடுபடுவது சட்ட விரோதமான செயலென இன்றுள்ள சட்டம் திருத்தி அமைக்கப்படவேண்டும். வாசஸ்தலங்களுக்குச் சமீபத்தில் ஆபத்தான வியாபார நடவடிக்கைகளை அனுமதிக்கலாகாது. மாட மாளிகைகளில் வசிப்பவர்களின் சுகாதாரத்தில் மட்டும் அக்கறை காட்டினுற் போதாது.

சேரிக் குடிசைகளில் வசிக்கும் ஏழை மக்களின் சுகாதாரத்திலும் சமுதாயம் அக்கறை காட்டுவது அவசியமாகும். தெருப் பெயர்களை அடிக்கடி மாற்றுவதும், அரசாங்க அலுவலகங்களை இடம்பெயரச் செய்தலுமே மகத்தான சாதனையாகக் கருதப்பட்டு வருகிறது. வேறு எத்தனையோ கடமைகளும் இருக்கின்றன என்பதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் உணர வேண்டும்.

தொழில்இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும், மாநகர சபையைச் சேர்ந்த சுகாதார அதிகாரிகளும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் சரிவரப் பிரயோகிக்க வேண்டும். அது அவர்களின் கடமையாகும். மக்களின் சுகாதாரத்தைப் பாதிக்கும் நடவடிக்கைகளைத் தடுக்க சட்ட நடவடிக்கைகள் எடுப்பதில் காலதாமதம் செய்தல் ஆபத்தானதாகும்!

## நான் விரும்பும் பண்டிகை

த. சரஸ்வதிதேவி, வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை.

தமிழர் ஆண்டுதோறும் கொண்டாடிவரும் விழாக்கள் பற்பல உள. அவற்றுள் பரம்பரை பரம்பரையாகக் கொண்டாடி வரும் ''தீபாவளிப் பண்டிகை'' நாளும் ஒன்றாகும். தமிழ் மக்களின் பண்பாட்டின் ஊன்றுகோலாய் அமைந்து விட்டது இத் தீபாவளிப் பண்டிகை. தமிழர் எங்குள்ளாரோ அங்கெல்லாம் தீபம் ஏற்றிச் சிறப்புடன் கொண்டாடும் இத் தினம் எங்கெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இப்பண்டிகை நாள் உலகிலுள்ள தமிழினம் முழுவதையும் ஒன்றுபடுத்தும் தகைமையுள்ளதாய் விழங்குகின்றது. இத் தினம் தமிழினம் முற்றிலும் தழைத்தோங்கும் இந்து சமயிகள் மத்தியிலே ஒரு புராண வரலாற்றின் அடிப்படையில் இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதனாலேயே ஆண்டுதோறும் பக்தி பூர்வமான சிரத்தையோடு கொண்டாடப்பட்டு வருகின்றது.

தீபாவளிப் பண்டிகை ஆண்டுதோறும் கூதிர் கால மான ஐப்பசி மாதத்தில் வரும். அதுபற்றிய புராணக் கதைகள் பலவுண்டு. தேவர்களையும், மக்களையும் வருத்திய நரகா சுரன் வதைக்கப்பட்ட தினம் அதுவெனவும், அவன் வேண்டு கோட்படி அவனை நினைவு கூரும் முகமாக மக்கள் தீபங்களை வரிசையாக ஏற்றுவர் எனவும் அவை கூறும். அக்கதைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உட்பொருளுண்டு. அன்று நம்மைப்போன்ற சிறுவர்களின் எண்ணமெல்லாம் பெட்டியி லுள்ள புத்தாடைகளைச் சுற்றிச் சுற்றி உலாவும். தீபாவளி யன்று அதிகாலையிலே, அந்தக் குளிரிலே எண்ணெய் தேய்ப் பதும், ஸ்நானஞ் செய்வதும்தான் கொஞ்சம் கசப்பான காரியங்கள். அந்த வைபவம் முடிந்த பிறகு ஒரே மகிழ்ச்சி தான். நாங்கள் எங்களுக்குரிய புத்தாடையை அணிந்து கொண்டு மற்றவர்களுக்குக் காட்டி மகிழ்வதில் உற்சாகங் கொள்வோம். சிலசமயம் சிற்றுண்டிகளை அளவுக்கு மீறி உண்டுவிட்டு வயிற்றுவலியால் வருந்துவதுமுண்டு! அதற் காக மருந்துண்பதுமுண்டு.

நான் விரும்பிக் கொண்டாடும் இப்பண்டிகை நாள் புராண தத்துவக் கருத்து நிறைந்தது. அறிவு வளர்ச்சிக்குப் பொருத்தமானது. அன்றியும் இவற்றினல் குடும்பத்தின ரிடையேயும், சுற்றத்தினரிடையேயும் ஒற்றுமையும் அன்பும் வளர்ச்சி பெறுகின்றன. உள்ளம் மகிழ்வெய்துகின்றது. அந்த நாட்களிலாவது மனிதரிடத்திலுள்ள தீய வியல்புகள் அடக் கிக்கொள்ளப்படுகின்றன.

## மாணவர் மன்ற அங்கத்தவர்களுக்கு!

பொங்கல் மலரில், அங்கத்தவர் இல. 1 இலிருந்து உங்கள் பெயர்களும், முகவரிகளும் திரும்பவும் வெளி யிடவிருப்பதால், உங்கள் பெயரில் அல்லது முகவரியில் மாற்றமிருப்பின் எமக்கு அறிவிக்கவும். — ஆசிரியர்

# தன்னம்பிக்கை

— சிவம் —

நமது உள்ளத்திலே தாழ்வு மனப்பான்மை குடிகொண்டு விட்டால் நாம் முன்னேறவே முடியாது. 'நான் தாழ்ந்தவன்' என்று எண்ணுதலே தாழ்வு மனப்பான்மையாகும். ஒரு காரியத்தைச் செய்யமுடியாத நிலை நமக்கு ஏற்பட்ட போது ''அந்த வேலையை நான் செய்யமுடியாது; அது என்னல் இயலாத காரியம்'' என்று ஒருபோதும் எண்ணக் கூடாது. இது எம்மை முன்னேற விடாது தடைக் கல் போட்டுவிடும். அதனுல், இந்தத் தாழ்வு மனப்பான்மையைத் தூக்கியெறிந்துவிட்டுத் தன்னம்பிக்கையை எமது மனதில் வளர்க்கவேண்டும். இத் தன்னம்பிக்கையை வளர்த்தல் சற்றுக் கடினமானதுதான். ஆனுல், வெகு முக்கியமானது.

நெல்லை நன்கு வளர்ப்பதற்காக அதற்கு உரமிடும் வேளையில் அங்கே புற்களும் வளர்வதுண்டு. அதுபோல், தன்னம்பிக்கையை வளர்க்கும் வேளையில் எம்மை யறியாமலே எமது உள்ளத்திலே 'தற்பெருமை' என்ற புல் வளரக்கூடும். அதை வளர விடாது தடுத்துப் பணிவுடனும், அடக்கத்துடனும் வாழப் பழகவேண்டும். தற்பெருமையானது பிறர் எம்மிடம் வைத்துள்ள மதிப்பைக் குறைத்து விடும்.

''இந்தக் காரியம் என்னுற் செய்யமுடியும்; நான் முயன்று இதைச் செய்யவேண்டும்'' என நினைப்பது தன்னம்பிக்கை.

''இது கஷ்டமான காரியமல்ல, நான் இப்போதே இதைச் செய்துமுடிக்கிறேன் பார்'' என்று பிறர் முன்னிலையில் தனது வீரப்பிரதாபங்களை விளம்பரம் செய்தல் தற்பெருமை. இவ்விரண்டினதும் வேறுபாட்டை உணர்ந்து தாழ்வு மனப்பான்மையை அகற்றித் தன்னம்பிக்கையை வளர்த்துத் தற்பெருமைக்கு இடம் கொடாது வாழ்பவன் வாழ்வில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்று வாழ்வதற்கு அடிகோலியவனுவான்!

-✶-

# முஸ்லீம் பெண்கள்

செல்வி எம். ஸீ. நஸீமா அல்-மனூர், முஸ்லீம் மகாவித். கல்ஹின்ன.

பெண்கள் மறைவிடத்தில் இருத்தல்வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. பெண்கள் வெளிக்கிளம்பிச் செல்லும் போது சாத்தான் [(Satan) மனதைக் கெடுக்கும் ஒன்று] அவர்களைச் சிங்காரித்து ஆண்களின் கண்களுக்குக் காட்டுகின்றான் என்பது எமது மதக் கருத்தாகும். பெண்களின் அழகு அவர்கள் அவயவங்களிலே அமைந் திருக்கின்றது. இதில் எது எவர் மனதைக் கவரும் என்பதை எவராலும் அறியமுடியாது. பெண்களின் கூந்தல், நெற்றி, புருவம், கண், மூக்கு, கன்னம் போன்றவைகளில் ஒவ்வொன்றும் ஆடவரை வசீகரிக்கக் கூடியதாக அமைந்திருக்கின்றது. இதனால் ஏற்படும் தீமைகளைத் தவிர்ப்பதற்காகவே ''பர்தா'' முறையைக் கையாளும்படி இஸ்லாம் கூறுகின்றது. மாதரின் கற்பு நெறிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மதமே எமது மதம். 'பர்தா' பெண்களின் பாதுகாப்பு ஆயுதம் என்றே கூறல்வேண்டும். 'பர்தா' என்பது பெண்களின் முகம் உட்பட தேகம் முழுவதையும் மறைத்து அணியும் ஆடையேயாகும்.

பெண்கள் அந்நிய ஆடவர் ஒருவருடன் பேச நேர்ந்தால் அவர்களிடம் பரிவு காட்டிப் பேசிவிடக் கூடாது. தேவையானவற்றைக் கட கட வென்று பேசல் வேண்டும். ஏனெனில் பெண்கள் தொனியில் ஒருவிதக் கவர்ச்சி இயற்கையாகவே அமைந் திருக்கின்றது. மனிதர்கள் யாவரும் நல்லவர்களாக இருக்க முடியாது. மனநோய் பற்றியவர்களும் உளர். எனவேதான் பெண்கள் ஆடவருடன் பரிவு காட்டிப் பேசக்கூடாதென்று இஸ்லாம் கூறுகின்றது. இவ்வாறுதான் அன்றைய முஸ்லீம் பெண்கள் இறைபோதனைக்கிணங்கி வாழ்ந்திருக்கின்றார்கள். இன்றும் சில பாகங்களில் அதாவது, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் சிலர் இவ்வாறே வாழ்கின்றனர்.

ஆனால், இன்றைய முஸ்லீம் பெண்கள் மேனாட்டவர்களின் நவ நாகரீகங்களைப் பின்பற்றி வாழ முயல்கின்றனர். இவர்கள் நாகரீக அலங்காரங்களைச் செய்து கவர்ச்

சியாக வாழ முனைகின்றனர். 'பர்தா' முறைக்கு எதிர் மாற்றமாகத் தலையில் முக்காடின்றிப் பெயருக்காக முந்தானையைத் தொங்க விட்டுக்கொண்டு தமது வடிவுக்கேற்ப அலங்கார உடைகளை உடுத்திக் கிளம்பிச் செல்கின்றனர். இன்றைய காலப் போக்கிற்குத் தக நாமும் வாழ வேண்டுமென்பதே இவர்களின் கருத்தாகும். இந்நிலையில் நாம் செய்யத்தக்கது யாது? என்ற கேள்வி எழுகின்றது. இன்றைய முஸ்லீம் பெண்கள் தாம் நினைத்த போக்கிலே சென்று கொண்டிருக்கக்கூடாது.

பல்லாண்டுகளாக எம்மை வழிநடத்திய எமது மதக் கோட்பாடுகளைப் புறக்கணிக்காமலும், முன்னேற்றப் பாதையிற் துரிதமாகச் செல்லும் மக்கட் சமூகத்திற் பின் தங்கியவர்களாக இருக்காத வகையிலும் எமது போக்கு அமைவது சாலச் சிறந்ததாகும்!


## தமிழக நேயர்களுக்கு

இந்தியாவிலுள்ளவர்கள்

**வெற்றிமணிக்குரிய சந்தா, பேனு நண்பர் சங்கம் மாணவர் மன்றம்**

இவற்றிற் சேர்வதற்குரிய தொகை யாவற்றையும இவருக்கு அனுப்புக

K. THAMIZHAMBI
KARIYAMPATTY (P. O.)
(Via.) KALLIMANDYAM
**PALANI. T. K.**
S. I.

# — கட்டுரைப் போட்டி —

## மொத்தப் பரிசு ரூபா 30-00

✳ மாணவர் மன்ற அங்கத்தவர்களுக்கு மாத்திரம் ✳

**கவனிக்க:-** பாடசாலையிற் கற்கும் மாணவர்கள் ஆண்-பெண் இருபாலாரும் வயதுக் கட்டுப்பாடின்றியும், பாடசாலையிற் படிக்காத - 22 வயதுக்குட்பட்ட - ஆண்-பெண் இருபாலாரும் மாணவர் மன்றத்தில் அங்கத்தவராகச் சேரலாம். இதுவரை அங்கத்தவர்களாகச் சேர்ந்தவர்களும், **31-12-69**க்கு முன் அங்கத்தவர்களாகச் சேர்கின்றவர்களும் கட்டுரைப் போட்டியிலும் மற்றும் போட்டிகளிலும் பங்குபற்றிப் பரிசு பெறலாம்.

1. பாடசாலை மாணவர் — 16 வயதுக்குட்பட்டவர்
**'தைப் பொங்கல்'** (250 சொற்களுள்)

2. பாடசாலை மாணவர் — 16 வயதுக்கு மேற்பட்டவர்
**'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'** (350 சொற்களுள்)

3. பாடசாலையிற் படிக்காதவர் — 22 வயதுக்குட்பட்டவர்
**'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'** (350 சொற்களுள்)

என்ற தலைப்பில் குறிப்பிட்ட சொற்களுக்கு அதிகப்படாது கட்டுரை எழுதி 31-12-69க்கு முன் அனுப்பவேண்டும்.

மூன்று பிரிவிலும் சிறந்த கட்டுரையாகத் தெரிவுசெய்யப்படும் ஒவ்வொரு கட்டுரைக்கும்
**தனித்தனி 10-00 ரூபா பரிசாக வழங்கப்படும்.**

ஒருமுறை மாணவர் மன்றத்தில் அங்கத்தவராகச் சேர்ந்தவர் வெற்றிமணி நடாத்தும் எந்தப் போட்டியிலும் பங்குபற்ற முடியும்.

> வெற்றிமணியில் உள்ள கட்டுரைப் போட்டிக் கூப்பனையும் உங்கள் கட்டுரையுடன் இணைத்து அனுப்புக.

**"வெற்றிமணி"** — முள்ளியவளை. — இலங்கை.

---

**கட்டுரைப் போட்டி** முடிவு திகதி **31-12-69**

பெயர் ....................................................

முகவரி ....................................................

பிறந்த திகதி ....................................................

மாணவர் மன்ற அங்கத்துவ இல. ....................................................

இக் கட்டுரை எனது சொந்த முயற்சியால் எழுதப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................
கையொப்பம்

# பேனு நண்பர் சங்கம்

உலகத்தின் பலபாகங்களிலு முள்ளவர்களைக் கடிதமூலம் அறிந்துகொள்ளவும், ஒருவர் கஷ்டத்தை மற்றவரிடம் கூறி ஆறுதல் கொள்ளவும், நல்லவர் உறவைப் பெறவும், தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இச்சங்கம் உதவியாக இருக்கும்.

1. சங்கத்தில் சேர 50சத முத்திரை / போஸ்ரல் ஆடர் அனுப்புக.
2. பெயர், முகவரி, வயது இவற்றைவிட அறிந்த பாஷைகள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், மற்றும் திறமைகள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் எழுதலாமா என்ற விபரங்களை 25 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்பவும்.
3. தோழர் தோழர்களுக்கும், தோழியர் தோழியர்களுக்குமே எழுதலாம். ஆனல் இருபாலாரும் எழுதலாம் எனக் குறிப்பிடின் எவரும் எழுதலாம்.
4. வயதுக் கட்டுப்பாடின்றி உலகத்தின் எப்பகுதியிலுள்ளவரும் சேரலாம்.
5. தங்கள் புகைப்படங்களை இப்பகுதியில் வெளியிட விரும்புகிறவர்கள் புளக் (Block) அனுப்பவேண்டும். புளக் இல்லாவிடில் புளக்செய்ய புகைப்படத்துடன் ரூ. 7-50 அனுப்பவேண்டும்.

**வெற்றிமணி, முள்ளியவளை, இலங்கை.**

# வெற்றிமணி மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்தில் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். பாடசாலையிற் படிப்பவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றிச் சேரலாம். விண்ணப்பத்துடன் 50சத முத்திரை அல்லது போஸ்ரல் ஆடர் பிரவேசக் கட்டணமாக அனுப்பவேண்டும். தமிழகத்திலுள்ளவர்கள் வெற்றிமணியிலுள்ள தமிழகப் பிரதிநிதியின் முகவரிக்கு அனுப்புக.

## அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

**அன்புள்ள மணி மாமாவுக்கு,**

மாணவர் மன்றத்தில் என்னை அங்கத்தவராகச் சேர்க்கவும்.

செல்வன் / செல்வி ........................................

பாடசாலை முகவரி ........................................

வீட்டு முகவரி ........................................

பிறந்த திகதி .................... வயது .................... வகுப்பு ....................

கடிதத்தொடர்பு ஆண், பெண் இருபாலாரும்.

........................................ ........................................

ஆசிரியர் / பெற்றோர் கையொப்பம் கையொப்பம்

## சிற்பங்கள்

## தேவையா?

★ மரச் சிற்பங்கள்! ★ பொம்மைகள்!

★ தேர்க் கட்டைகள்

★ வெள்ளெருக்கன் வேரில் சிறிய விநாயகர்

மற்றும் பல்வேறு அழகான சிற்பங்களைப் பெற

இன்றே எமக்கு எழுதுங்கள்!

**சிற்பி நெல்லையப்பர்,**

திருப்பாலைத்துறை, பாவஞசம், P. O.

தஞ்சை மாவட்டம், தமிழ்நாடு.

## பொங்கல் மலர்

தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்கள் பலரும்

பங்கு கொள்ளும்

வெற்றிமணி பொங்கல் மலர்

**பொங்கல் அன்றே**

**நேயர்கள் கையில் கிடைக்கக்கூடியதாக**

**வெளிவரும்.**

தேவையானோர் இப்பொழுதே 75 சதம் அனுப்பி

பெயரைப் பதிவுசெய்து கொள்ளவும்.

சந்தா அனுப்பிய நேயர்களுக்கு மேலதிகச் செலவின்றி

மலர் அனுப்பிவைக்கப்படும். —ஆசிரியர்

## விற்பனையாளர்கள் தேவை!

வெற்றிமணி விற்பனை செய்ய

**முற்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை**

பிரதிக்கு 5 சதம் கமிஷன் கொடுக்கப்படும்.

**விளம்பரம் சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு**

20 சத வீதக் கமிஷன் கொடுக்கப்படும்.

ஆசிரியர்

இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது Q.B.1338


**QUALIFIED OPTICIANS**

*Visit*

# MOHANLAL. C. VASA

No. 207, Second Cross Street,

**COLOMBO. 11.**

*Telegrams:* **VASOPTICO** *Telephone:* **21631**

---

**கண்களுக்குத் தேவையான**

**சகலவிதமான கண்ணாடிகளுக்கும்**

**எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**

# மோகன்லால் C. வாசா

இல. 207, இரண்டாங்குறுக்குத் தெரு,

**கொழும்பு. 11.**

தொலைபேசி: 21631


இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொ. இராசரத்தினம் அவர்களால் முள்ளியவளை தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-12-69 திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது: